2006 செப்டம்பர் 2]

சொச்சம் அலுவலர்களையும் வைத்துக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, 24 இலட்சம் வாகனங்கள் இருந்தபோது அமைக்கப்பட்ட cadre strength அது. இப்போது, அதிகமான அளவிற்கு Officers வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அதற்கான முன்மொழிவை அனுப்ப வேண்டுமென்று துறையின் வாயிலாகக் கேட்கப்பட்டிருக்கிறது. விரைவிலே புதிய அலுவலகங்கள், இந்த ஆண்டு 5 இடங்களில் அமைக்கப்பட்டதுபோல, மற்ற தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் இந்தப் போக்குவரத்து அலுவலகங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், இது செலவு மட்டுமல்ல; அரசாங்கத்திற்கு பெரிய வருவாயைக் கொடுக்கக்கூடிய துறை என்ற காரணத்தால், அதற்காக அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வுசெய்து, ஓரளவுக்கு இசைவு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, புதிய அலுவலகங்கள் அமைக்கப்படும்போது, நிச்சயமாக திருவெறும்பூர் பகுதியிலும் துணை அலுவலகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

146—

தனி வட்டம்

* 718—**திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

[2006 செப்டம்பர் 2

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்திலே 262 குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே சுமார் 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கொல்லிமலை ஒன்றியத்தில் 14 பஞ்சாயத்துகள் உள்ளன. அதில் 7 பஞ்சாயத்துகள் நாமக்கல் தாலுகாவிலும், மீதமுள்ள 7 பஞ்சாயத்துகள் ராசிபுரம் தாலுகாவிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, இரண்டு தாலுகாக்களுக்கும் செல்கிற நிலைமை இருக்கிறது. 70 கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்து செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, சாதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது என்று சொன்னாலும், நாமக்கல்லுக்குச் செல்லவேண்டிய நிலைமையும், ராசிபுரம் செல்ல வேண்டிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே, அதை மாற்றி, கொல்லிமலை தனித் தாலுகாவாக அறிவிக்கப்படுமா என மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டு தாலுகாக்கள் அங்கே இருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். அவர் கோரியிருப்பதைப் பொறுத்தவரையிலே, நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய வரையறைப் பணிகள் காரணமாக, தற்சமயம் தடை செய்யப்பட்டுள்ளது. அந்தத் தடை நீங்கியவுடனே, அதுபற்றிய உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

முற்பகல் 10–05

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர் பகுதியான அம்பத்தூர் தாலுகா, பூவிருந்தவல்லி தாலுகா, தாம்பரம் தாலுகா ஆகியவை மிகப் பெரிய தாலுகாக்களாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் பிரித்து, சீரமைத்து, 3 தாலுகாக்களை 5 தாலுகாக்களாக மாற்றுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகின்றேன்.

2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எதிர்காலத்திலே நம்முடைய அரசினுடைய நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

147—

கோயிலைப் புதுப்பித்தல்

*** 1670—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாட்சி ஊராட்சி, நத்தமேடு அம்மன் கோயிலைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூனாட்சி அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில் கருவறை, முன்மண்டபம், மதிற்சுவர் ஆகியவை சீரமைக்க வேண்டிய நிலையில் உள்ளன. இதற்கு உத்தேசமாக ரூ. 5 இலட்சம் தேவைப்படுகிறது. ஆனால், இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,265 ரூபாய் மட்டுமே இருக்கின்ற நிலையில், இந்தத் திருக்கோயிலின் பெயரில் ரூபாய் 6,000 மட்டுமே முதலீடாகவும் இருக்கிறது. ஆகவே, போதிய நிதி வசதி இல்லாததால், தற்போது திருப்பணி செய்திடுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதியில், பூனாட்சி ஊராட்சிக்குட்பட்ட நத்தம்மேடு அம்மன் கோயில், பழமையான கோயில். இக்கோயிலைப் புதுப்பித்துத்தர, கடந்த ஆட்சியில் பொதுமக்கள் கோரிக்கை வைத்தும் நிறைவேற்றப்படவில்லை. இந்தக் கோயிலுக்கு 11 ஏக்கர் நிலம் உள்ளது.